
பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 15 திங்கட்கிழமை 01.12.2025 கதிர் 023

## இனி அது ரகசியம் அல்ல!



யாழ்ப்பாணம் திருநேல்வேலிப் பகுதியில் நேற்றுக் காலையில் அதிர்ச்சியூட்டும் மிகப் பயங்கரமான படுகொலைஒன்றுஇடம்பெற்றுள்ளது. திருநெல்வேலிச் சந்திக்கும் ☞ 2

# வீதியில் இளைஞனைத் துரத்தித் துரத்தி பட்டப் பகலிலேயே வெட்டிப் படுகொலை

## ஒரு கால் துண்டாடப்பட்ட பயங்கரம் திருநெல்வேலியில் நேற்றுச் சம்பவம்



யாழ்ப்பாணம் மாவட்டம், திருநெல்வேலியில் நேற்றுக்காலை மழைக்கு மத்தியிலும் பட்டப் பகலில் பலரும் பார்த்திருக்க இளைஞர் ஒருவர் மிகக் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டார். அவரது வலது கால் பாதத்துடன் வெட்டித் துண்டாடப்பட்டது. வெட்டுக் காயங்களுடன் உயிர் தப்பிக்க ஓடிய இளைஞர் கடை ஒன்றில் வாசலில் சென்று விழுந்தபோது இருவர் அவரது காலை வெட்டித் துண்டாடியதுடன் சரமாரியாக வெட்டிக் கொன்றனர்.

குற்றவியல்வழக்குஒன்றில்நீதிமன்றஉத்தரவுக்கமைய கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடச் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவரே இப்படிக் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டார். 2 மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் அவரை வழிமறித்து வாள்களால் சரமாரியாக வெட்டிச் சரித்தனர்.

திருநெல்வேலிச்சந்தியில்இருந்துகல்வியங்காடுநோக்கிச் செல்கையில் ஆடியபாதம் வீதியில் கலாசாலை வீதிக்கு அருகாக இந்தப் பயங்கரச் சம்பவம் இடம்பெற்றது. காலை நேரத்தில் திருநெல்வேலி சந்தைக்கு வருபவர்கள் ☞ 2

# பேரிடர் சாவுகள் 334ஆக உயர்வு

## மேலும் 370 பேரைக் காணோம்





இலங்கையில் சூறாவளி, வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்களில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 334 ஆக உயர்ந்துள்ளது என்று இடர் முகாமை மத்திய நிலையம் அறிவித்துள்ளது. மேலும் 370 பேர் காணாமற்போயுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 11 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

'தித்வா' சூறாவளியினால் இலங்கை முழுவதும் ஏற்பட்டுள்ள வெள்ளம் ☞ 2

## பேரிடர் மீட்புப் பணிகளுக்கு ரூ 3 ஆயிரம் கோடி ஒதுக்கீடு

### தேவை எனில் இன்னும் அதிகம் பெற்றுத் தரப்படும் என அநுர உறுதி

புயல், மழை, வெள்ளம், மண்சரிவு போன்ற பேரிடர்களால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை மீட்டெடுப்பதற்கான பணிகளுக்கென 3 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்துள்ளார்.

பேரிடர்தொடர்பாகவும்மீட்புப்பணிகள்தொடர்பாகவும் அவர் நேற்றிரவு 8.30 மணியளவில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு நாடென்ற வகையில் நாம் வரலாற்றில் மிகப்பெரிய மற்றும் மிகவும் சவாலான இயற்கை பேரழிவிற்கு முகங்கொடுத்துள்ளோம் என்பதை நாம் அறிவோம். இந்த நாட்டின் வரலாற்றில் மிகவும் சவாலான மீட்பு நடவடிக்கையை நாம் தொடங்கிள்ளோம் என்பதையும் அறிவோம். முழுநாடும்பேரழிவிற்கு ☞ 2

## மீட்பு ஹெலி விபத்தில் விமானி பரிதாபச் சாவு

### மேலும் நால்வர் உயிருடன் மீட்பு

வென்னப்புவவில் பேரிடர் மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் போது விபத்துக்குள்ளான பெல் 212 ஹெலிகாப்டரின்விமானியான இலங்கைவிமானப்படை விங் கமாண்டர் நிர்மல் சியம்பலாபிட்டிய காலமானார் என்று விமானப்படை உறுதிப்படுத்தியுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர நிலைகளுக்கு உதவும்போது ஹெலிகாப்டரே விபத்துக்குள்ளானது. அதிகாரிகளின் கூற்றுப்படி, ☞ 2

## பாதிக்கப்பட்ட அனைவருக்குமே உலர் உணவு வழங்கவேண்டும்

### பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்து

தற்காலிக பாதுகாப்பு முகாம்களுக்கு செல்வர்களுக்குமாத்திரம்உலர்உணவுகளைவழங்க வேண்டுமென இடர் நிவாரண சேவை சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்களில் குறிப்பிடப்படவில்லை. தற்காலிகமுகாம்களுக்குவருகைத் தராத நிலையில், பாதிக்கப்பட்டுள்ள சகல தரப்பினருக்கும் உலர் உணவுகளை வழங்க ☞ 6

### வெள்ள மேலாண்மைப் பணியில் ஈடுபட்ட சமயம்

## சுண்டிக்குளத்தில் காணாமற்போன கடற்படையினர் ஐவரும் இறப்பு

சுண்டிக்குளம் பகுதியில் வெள்ள நிவாரண நடவடிக்கையின்போது காணாமல்போன ஐந்து இலங்கைக்கடற்படையினரும்இறந்துவிட்டனர் என்று பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

முகத்துவாரம்பகுதியில்நேற்றுஅதிகாலையில் நீர்வழிப்பாதையை விரிவுபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோது கடற்படையினர் காணாமல்போயினர்என்றுபொலிஸார் ☞ 2

## இடர்நிலை குறித்து இருநாள்கள் நாடாளுமன்றில் விவாதம் தேவை

### தயாசிறி எம்.பி. வலியுறுத்து

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் இடர்நிலை குறித்து நாடாளுமன்றத்தில் இரண்டு நாட்கள் விவாதம் நடத்த கோர எதிர்பார்த்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து இன்று காலை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் ☞ 6

## முன்னாயத்த நடவடிக்கை எடுத்திருந்தால் பேரிழப்புக்களைக் குறைத்திருக்க முடியும்

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

நிலவும் சீரற்ற காலநிலை குறித்து காலநிலை அவதானிப்பு மத்திய நிலையம் முன்கூட்டியதாகவே எதிர்வு கூறியுள்ளது. இந்த எதிர்வுகூறலை அடிப்படையாகக் கொண்டு ஆளும்தரப்பு இடர் முகாமைத்துவத்துக்கான முன் ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் பாதிப்புக்களையும், உயிரிழப்புக்களையும் குறைத்துக் கொண்டிருக்கலாம். இவ்விடயத்தில் ஆளும்தரப்பு அலட்சியமாக செயற்பட்டுள்ளன ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அதுகோரல குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு என்ற ரீதியில் இயற்கை இடர்ங்களை எதிர்கொள்ள ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

காலாசாலைச் சந்திக்கும் இடையில் இரு மோட்டார்சைக்கிள்களில்நால்வர்காத்திருந்து, பொலிஸ்நிலையத்தில்கையெழுத்திடச்சென்ற ஒரு சந்தேகநபரை வெட்டிப் படுகொலை செய்துள்ளனர்.

திருநெல்வேலியில் புகழ்பெற்ற மரக்கறிச் சந்தை அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய மரக்கறி மொத்த விற்பனைச் சந்தை அது. அதனால் அந்தப் பகுதி காலை 5.30மணிமுதல்மிகவும்சனநடமாட்டத்துடன் பிஸி யாக இருக்கும். அப்படிப்பட்ட இடத்திலேயே ஒரு சந்தேகநபருக்காகக் காத்திருந்து, அவர் பயணித்த மோட்டார் சைக்கிளை வழிமறித்து, வீதியில் அவரை ஓட ஓடத் துரத்தித் துரத்தி சரமாரியாக வெட்டிப் படுகொலை செய்துள்ளார்கள். ஓடியவரின் வலது காலை வெட்டித் துண்டாடியுள்ளார்கள்.

கொலையாளிகள்எவ்விதஅச்சமும்இன்றி சுமார் இரண்டு நிமிடங்கள் அந்த இடத்தில் இயல்பாக நின்று ஒரு மனிதனை வெட்டிக் குதறி துடிக்கத் துடிக்கக் கொன்றுள்ளார்கள். இவை அனைத்தையும் காணொளிக் காட்சிகளில் நன்றாகப் பார்க்க முடிகிறது. கொலை நடந்தபோது அந்த வீதி வழியாகப் பயணித்தவர்களும்அந்தப்பகுதிகளில்இருந்த கடைகளில் இருந்தவர்களும் கடைகளுக்கு வந்திருந்தவர்களும் பார்த்திருக்கவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது. யாரும் கொலையாளிகளைத்தடுக்கவோ அவர்களை ஒருவரை வெட்டுவதை அச்சுறுத்தவோ முயற்சிக்கவேயில்லை.

மக்கள் அப்படித் தங்களை அடித்து விரட்டுவார்கள் அல்லது பிடித்துக் கட்டுவார்கள் என்கிற அச்சம் ஏதும் இன்றித்தான் கொலையாளிகளும் அங்கு செயற்பட்டார்கள். இரு மோட்டார் சைக்கிள்களில் (யமஹா எவ்.இசற் மற்றும் பல்ஸர் 200) வந்த நால்வரில் பின்னால் இருந்து வந்த இருவர் முரட்டுக்கத்திகளுடன் இறங்கி சந்தேகநபரான இளைஞரை வீதியிலும் கடை வாசலிலும் வைத்து கசாப்புக் கடையில் ஆட்டை, மாட்டை வெட்டுவது போன்று வெட்டிகிறாா்கள். ஆனால் அவர்களுக்கு எதிராக அல்லது அவர்களை அச்சுறுத்துவது போன்று ஒரு குரல்கூட எழவில்லை.

தமிழ் திரைப்படங்களில்கூட இவ்வளவு குருதியும் கொடூரமுமாக ஒரு காட்சி நிகழ்ந்தேறுமா என்கிற அளவில் கொடூரமாக நிகழ்ந்துள்ள இந்தப் படுகொலை யாழ்ப்பாணத்தை அச்சுறுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக அநியாயக் கொலைகள் அதிகரித்துள்ளன. நகைக்காகப்பெண்கொலை, வெளிநாட்டில் ஏற்பட்ட முரண்பாட்டுக்காக துன்னாலையில் கொலை என்று தொடர்ந்தும் குற்றக் கும்பல்களின் கொலைக் களமாக யாழ்ப்பாணம் மாறியுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவங்களோடு தொடர்புடையவர்களைப் பொலிஸார் பிடித்து விடுகின்றனர். முதன்மையான கொலையாளிகள் பிடிக்கப்படுகின்றனரோ இல்லையோ கொலையோடு ஏதோஒரு விதத்தில் தொடர்புபட்டவர்கள் கைது செய் யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகின்றனர். கொலைநிகழ்ந்தபின்னர்கொலையாளிகளைப் பிடிப்பது மட்டுமே பொலிஸாரின் கடமையல்ல. குற்றங்கள்நிகழாதவகையிலானஏற்பாடுகளை மேற்கொள்வதும் காவல்துறையினதும் நீதித்துறையினதும் கடமை. ஆனால், யாழ்ப்பாணத்தில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நடமாடவேண்டியளவிற்கு பாதுகாப்பற்ற உணர்வையே மக்கள் கொண்டிருக்கவேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.

அதிலும் பாதாள உலகக் குழுக்களுக்கும் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கும் எதிராக தீவிர நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரசுத் தலைவரும் ஆளும்தரப்பினரும் கூவி வரும் நிலையில்தான் யாழ்ப்பாணத்தில் நிலமை மோசமடைந்து வருகின்றது. யாழ்ப்பாணம் கொலைக்களமாக மாறி வருகின்றது. இந்த நிலமையைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் யாழ்ப்பாணத்திலிருந்து இளைஞர்களின் வெளியேற்றத்தைத் தடுக்க முடியாது என்பது நிச்சயம்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வருடங்களாகவே இடம்பெறும் கொலைகள் மற்றும் பாதாள உலகக் கும்பல்களுக்கும் போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கும் இடையிலான தொடர்புகள் என்பன வெளிநாடுகளில் இருக்கும் குற்றப் பின்னணிகளைச் சேர்ந்த இலங்கையத் தமிழர்களின் பின்னணியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அத்தகையவர்களை இலங்கைக்குக் கொண்டு வந்து பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன், யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் வெளிநாட்டுக் காசில் மோட்டார் சைக்கிள் ஓடி, மது அருந்திக் கெட்டுப் போகிறார்கள் என்று வசைபாடும் புலம்பெயர் தமிழர்கள், அங்கிருப்பவர்கள் இங்கு இருக்கும் இளைஞர்களை கொலைக் கும்பல்களாக மாற்றுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். காசுகளை அள்ளிக் கொட்டி யாழ்ப்பாணத்தைக் கொலைக்களமாக மாற்ற இடமளிக்காதீர்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பேரிடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மண்சரிவு உள்ளிட்ட இடர்களால் 3 லட்சத்து 9 ஆயிரத்து 607 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 11 லட்சத்து 18 ஆயிரத்து 929 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாடுமுழுவதும் 1,275 பாதுகாப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 55 ஆயிரத்து 747 குடும்பங்களைச் சேர்ந்த 1 லட்சத்து 96 ஆயிரத்து 790 பேர் தற்போது பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பணிகள் மற்றும் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டுள்ளவர்களைத்தேடும்நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் 25 மாவட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. கொழும்பு, கம்பஹா, புத்தளம்ஆகியமாவட்டங்களில்அதிகளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் கண்டி (88), பதுளை (71), நுவரெலியா (68) குருநாகல (37), மாத்தளை (23) ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களில்உயிரிழந்தவர்களின்எண்ணிக் கைகளுக்குநிகராகக்காணாமற்போனவர்களின் எண்ணிக்கையும் உள்ளது.

## பேரிடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்படுத்தப்பட்ட முதல் அனுபவம் இது. நாளாபக்கங்களிலிருந்தும் முழு நாடும் நீரில் மூழ்கி பேரழிவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இது மிகவும் கடினமான ஒரு செயற்பாடாகும். இதனை நாம் வெற்றி கொள்ளவேண்டும். இந்தக் கொடூரமான இயற்கைப் பேரழிவினால் நமது சிறிய தீவை உலுக்க முடிந்தாலும், இந்த நாட்டு மக்களின் மனிதநேயத்தையும் உறுதியையும் எந்த வகையிலும் அசைக்க முடியாது என்பதை இது மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

எனது அன்பான மக்ககளின் அசைக்க முடியாத தைரியத்துடன், இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்று நாங்கள் ஆணித்தரமாக நம்புகிறோம். இந்தப் பேரழிவில் இறந்த அனைவரையும் மீண்டும் உயிர்ப்பிக்க முடிந்தால், எந்த சூழ்நிலையிலும் அதைச் செய்வதற்கு நாங்கள் இருமுறை யோசிக்க மாட்டோம். இறந்த அனைவரின் குடும்பங்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது அனுதாபத்துடன் மட்டும் நின்றுவிடாமல் அந்த உயிர்களை அந்த குடும்பங்களுக்குத் திரும்பக் கொண்டுவர முடியாவிட்டாலும், ஏனைய அனைத்தையும் வழங்க நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். அதேபோன்று காணாமல் போனவர்கள் அனைவரும் உயிருடன் இருக்கிறார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். இந்தப் பேரிடரினால் பாதிக்கப்பட்ட பலருடைய துன்பத்தைத் தணிக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பக்கபலமாக இருப்பதற்கும் முன்வந்த அனைவரையும் நாம் அன்புடன் அரவணைக்கிறோம்.

இயற்கைப் பேரிடர்களை முறையாக கட்டுப்படுத்த முடியாத போதும் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் மற்றும் அவசர நிலைமைகளை உரிய வகையில் முகாமைத்துவம் செய்தல், பழைய நிலைக்கு அல்லது முன்பைவிட சிறந்த நிலைக்கு மீண்டும் கட்டியெழுப்புதல் ஆகிய செயல்முறைகளின் முக்கியத்துவம் ஆளும்தரப்பிற்குரியது. அதற்குத் தேவையான மற்றும் சாத்தியமான நடவடிக்கைகள் எவ்வளவு கடினமாக இருந்தாலும் அதனை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

இந்தப் பேரிடரை எதிர்கொள்ளும்போது, மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் கருவிகளைக் கொண்ட ஒரு நாட்டில், நம்மிடம் உள்ள விலைமதிப்பற்ற மனித வளம் வேறு எதையும்விட மதிப்புமிக்கது என்பதை நாங்கள் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளோம். தன்னம்பிக்கை நிறைந்த மற்றும் அனர்த்தத்தின் போது விட்டுச் செல்லாத அனைத்து சந்தர்ப்பங்களிலும் உள்ள மனஉறுதியுடனான எமது நாட்டு மக்கள்கள் தொடர்பில் நாம் பெருமைப்படுகிறோம்.

சில சுற்றறிக்கைகள் பாதிக்கப்பட்டவர் களுக்குஉதவிகளைவழங்குவதில்தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அந்த சுற்றறிக்கைகள் அனைத்தையும் நாங்கள் மாற்றியமைத்து, அவர்கள் எங்கு இடம்பெயர்ந்துள்ளனர் அல்லது எங்கு வசிக்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் அரச உதவி வழங்கப்படவேண்டும் என்ற நோக்கில் ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளோம். சில சுற்றறிக்கைகள் அதிகாரிகளுக்கு தேவைக்கேற்ப பணத்தைப் பயன்படுத்துவதற்குத் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அந்த சுற்றறிக்கைகளை நாங்கள் மாற்றியுள்ளோம். ஒரு பிரதேச செயலாளருக்கு 500 இலட்சம் ரூபா வரை செலவிட அனுமதி அளித்துள்ளோம்.

மேலும், கடந்த வரவு செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 3,000 கோடி ரூபாய் எங்களிடம் உள்ளது.அதை நாங்கள் நாடாளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் செலவிட முடியும். அதனை இந்தச் செயற்பாட்டிற்காக ஒதுக்கியுள்ளோம். மாவட்ட செயலாளர்களுக்கு எவ்வளவு பணம் தேவையோ அதையெல்லாம் வழங்க தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

2025 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லாவிட்டால்,குறைமதிப்பீட்டின் ஊடாக மேலும் நிதியை வழங்கலாம். வழங்கியுள்ள நிதியின் மூலம் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, சுகாதார உதவிகளை வழங்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும், இந்த அனர்த்த சூழ்நிலை காரணமாக, ஏராளமான அத்தியாவசிய சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அழிக்கப்பட்டுள்ளன. பல பகுதிகளில் மின்சார வலையமைப்பு சேதமடைந்துள்ளது. தகவல் தொடர்பு வசதிகள் அழிக்கப்பட்டுள்ளன. பிரவேச வீதிகள் அழிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற பல உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் அழிக்கப்பட்டுள்ளன. உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை துரிதமாக மீளமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.அனர்த்தத்தினால் பாதிக்கப்படாத பகுதி ஊழியர்கள் இந்த உள்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

அமைச்சுக்களுக்கு நிறுவனங்களுக்கு வேறுபணிகள் இருந்தாலும் பிரதானபணியாக கருதி இந்த உட்கட்டமைப்பு வசதிகளை மீளமைப்பதற்காக நாம் ஏற்கெனவே திட்டமொன்றை தயாரித்துள்ளோம். மின்சார சபை , நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை , தகவல் தொடர்பு நிறுவனங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற அத்தியாவசிய நிறுவனங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம் தேவையான பங்களிப்பையும் வழிகாட்டுதலையும் நாங்கள் வழங்கி வருகிறோம். அதனால், மிகக் குறுகிய காலத்திற்குள் இந்த உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை முழுமையாக செயல்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன்.

சீராகவும் முறையாகவும் எழுந்து நிற்கப் போராடிக்கொண்டிருந்த ஒரு நாட்டிற்கு இந்த நிலைமை சாதாரண சவாலல்ல. சிறு சுயதொழில் முயற்சி முதல் பாரிய அளவிலான கைத்தொழில்கள் வரை, சிறு தொழில்முனைவோர் முதல் பாரிய அளவிலான தொழில்முனைவோர் வரை, அனைத்துத் தரப்பினரும் தங்கள் வருமானத்தை இழந்துள்ளன. விவசாயம், விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

எனவே, இவை அனைத்தையும் மிக விரைவாக மேம்படுத்துவதற்கு நமக்கு ஒரு துரித திட்டம் அவசியம் . அதனால்தான், இந்தப் பேரிடர் சூழ்நிலையை முகாமைத்துவம்செய்து, விரைவான மற்றும் திறமையான மீள்கட்டமைப்புக்குத் தேவையான சட்டப் பாதுகாப்பு மற்றும் வளங்களை வழங்க அவசரகால நிலையை அறிவித்துள்ளோம். இந்தப் பேரிடரை முகாமைத்துவம்செய்வதற்கும், நமது நாட்டை செயற்திறனுடன் கட்டியெழுப்புவதற்காக அன்றி வேறு எந்த அடக்குமுறை நடவடிக்கைக்கும் இந்த அவசரகால நிலையைப் பயன்படுத்த மாட்டோம் என்பதை இந்த நாட்டின் பிரஜைகளுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்.

## சுட்டிக்குளத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர். கடற்படை உடனடியாக ஒரு சிறப்பு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டது, தேடுதல் மற்றும் மீட்பு குழுக்களையும்சம்பவஇடத்திற்குஅனுப்பியது.

சம்பவம் நடந்தபோது, அப்பகுதியில் செயல்பட்டு வந்த வெள்ள உதவிக் குழுவில் இந்த பணியாளர்கள் இருந்ததாக கடற்படை செய்தித் தொடர்பாளர் கேப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

சவாலான வானிலைக்கு மத்தியிலும் ஐந்து உடல்களையும் மீட்க அதிகாரிகள் பணியாற்றியதால், மாலை வரை தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்தன.

## முன்னாயத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.இயற்கை இடர்த்தை எவராலும் தடுக்க முடியாது. ஆனால் சிறந்த திட்டமிடல்களால் இடர்த்தால் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளலாம்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட உயிர் மற்றும் சொத்து இழப்புக்குள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இடர் முகாமைத்துவத்துக்கு ஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஜேவிபியைப் போன்று அழிவுக்கு மத்தியிலும் அரசியல் செய்யும் கொள்கை ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாது.

நிலவும் சீரற்ற காலநிலை குறித்து காலநிலை அவதானிப்பு மத்திய நிலையம் முன்கூட்டியதாகவே எதிர்வுகூறியுள்ளது. இந்த எதிர்வுகூறலை அடிப்படையாகக் கொண்டு ஆளும்தரப்பு இடர் முகாமைத்துவத்துக்கான முன் ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் பாதிப்புக்களையும், உயிரிழப்புக்களையும் குறைத்திருக்கலாம்.

இடர் முகாமைத்துவ முன் ஆயத்த நடவடிக்கைகளை ஆளும்தரப்பு எடுக்கவில்லை. வெள்ள இடரின்போது ஆளும்தரப்பின்பிரதிஅமைச்சர்ஒருவர்முகப்பு புத்தகத்தின் ஊடாக நேரலை வந்து 'படகு இருந்தால் தாருங்கள்' என்று குறிப்பிடுகிறார். இவ்வாறுதான் இவர்களின் முன் ஆயத்த நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

இடர் நிலமையின்போது அச்சமின்றி செயற்படுவதற்கு அரச ஊழியர்கள் தயங்குகிறார்கள். இடருக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு உதவியளிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு மற்றும் அரச நிர்வாக அமைச்சு ஆலோசனை வழங்கும் வரையில் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

மாவட்ட மற்றும் பிரதேசசெயலகபிரிவுகள் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமையச் செயற்படலாம். ஆனால் இந்த ஆளும்தரப்பு அனைத்திலும் குறை கண்டுப்பிடிப்பதால் அரச அதிகாரிகள் விரைவாக செயற்படுவதற்குத் தயங்குகிறார்கள்.

நெருக்கடியான சூழ்நிலையில் அச்சமின்றிச் செயற்படுவதற்குரிய சூழலை அரச அதிகாரிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள இக்கட்டான நிலையில் இருந்து மீள்வதற்கு ஆளும்தரப்பு எடுக்கும் சிறந்த திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார்.

## வீதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட பெருமளவில் சனப் புழக்கம் உள்ள இந்த வீதியில் பலரும் பார்த்திருக்கவே இளைஞர் வெட்டிக் கொல்லப்பட்டார். கொலையாளிகளைத் தடுக்க எவரும் முன்வரவில்லை. கைகளில் கூர்மையான வாள்களுடன், வெறித்தனமாகத் துரத்தித் துரத்தி வெட்டுபவர்களை நாங்கள் எப்படித் தடுப்பது என்று சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார்.

கொல்லப்பட்டவர் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ஒருவர். வன்முறைச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் அவர் மீது வழக்கு உள்ளது. அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட நீதிமன்றம் நிபந்தனை விதித்திருந்தது. அதனடிப்படையில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட தனது உறவினர் ஒருவரின் மோட்டார் சைக்கிளில் சென்று

தொடர்ச்சி 3ம் பக்கம்....

# போர்க்கால அடிப்படையில் இந்தியா மீட்பு பணிகளைச் செய்யவேண்டும்

## திரைப்பட இயக்குநர் கௌதமன் வேண்டுகோள்

தித்வா புயல்மற்றும்வெள்ளப்பெருக்கு கோரத் தாண்டவத்தினால் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி இந்தியாவானது போர்க்கால அடிப்படையில் மீட்பு பணிகளில் ஈடுபட வேண்டுமென தென்னிந்திய பிரபல இயக்குனரும், தமிழ்ப் பேரரசு கட்சியின் நிறுவனருமாகிய கௌதமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:



தித்வா புயலின் கொடூர தாக்குதலில் இலங்கையில் இதுவரை 123 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 130 பேர்வரை வெள்ளத்தில் காணாமல் போயுள்ளனர் எனவும் ஊடகங்கள் வாயிலாக அறிந்துபோது மனம் வேதனையில் துடித்துப்போனது. இந்தத் துயரச்சம்பவத்திற்கும் பேரிழப்பிற்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிக்கிறேன்.

கண்டி மாவட்டத்திலேயே அதிகமான இறப்புக்கள் நிகழ்ந்துள்ளதாக செய்திகள் வாயிலாக அறிய முடிகிறது. எனவே அந்த மாவட்டத்திற்கு அநுர அரசு அதிகப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

அதுபோல ஏனைய இடங்களுக்கும், எமது தாய்த் தமிழீழ மக்களின் பூர்வீக பகுதிகளுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஐந்தறிவு உள்ள மிருகங்கள்கூடச் செய்வதறியாதுவீதிகளுக்குவருகின்றதையும், வீடுகளுக்கு மேலே ஏறி பதற்றத்தோடு நின்று கொண்டிருப்பதையும் ஊடகங்கள் வாயிலாகப் பார்க்கும்போது எமது மக்களின் நிலை குறித்து நினைத்துப் பார்க்கவே மனம் தவித்துப்போகிறது

பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கும் எம் தமிழீழ உறவுகளுக்கும் இந்திய ஒன்றிய அரசானது விரைந்து சில உதவித் திட்டங்களை வழங்கியதை வரவேற்கிறேன். அதே போன்று எமது தொப்புள் கொடி உறவுகளுக்கு தமிழ்நாடு அரசும் உடனடியாக உதவிக்கரம் நீட்ட வேண்டுமென முதலமைச்சர் ஸ்டாலினிடம் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க மற்றும் அ.தி.மு.க ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு அமைத்து மிக விரைவாக பிரதமர் மோடி அவர்களை சந்தித்துப் பேச்சு நடத்தி ஒரு மீட்பு குழுவினரை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்.

உணவு, உடை தேவைகளுக்கு அப்பால் அங்கு பரிதவித்து நிற்கும் மக்களின் பாதுக்காப்பினையும் உறுதிப்படுத்த இந்தியா போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதில் அநுர அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் அநுர அரசின் செயற்பாடுகளுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் முன்னைய ஆட்சியாளர்களின் குழுவினர் சூழ்ச்சியுடன் செயற்படுகின்ற விடயமும் தெரியவருகின்ற பொழுது இயற்கை பேரழிவைவிட மேலான பேரழிவு என மனம் கசந்து போகிறது.

யாராக இருந்தாலும் உயிர்களுடன் விளையாடாதீர்கள். இவ்வாறான தரப்பினர் குறித்து அநுர ஆளும்தரப்பு கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் தவறான நோக்கங்களை நீர்த்துப்போகச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாமல் போனால் அது அநுர அரசுக்கு களங்கம் என்பதுடன் அது ஆபத்தாகவும் அமையக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது.

இந்தியா என்ற சகோதரன் எப்போதும் தமக்காக நேசக்கரங்களை நீட்டுவதற்கு தயாராக உள்ளான் என்ற நம்பிக்கை எமது இலங்கை மக்களுக்கு ஏற்பட வேண்டும். அதற்கு ஏற்ப இந்தியா விரைந்து செயற்பட்டு, ஈழத்து உறவுகளின் பாதுக்காப்பை உறுதிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தடுமாறக் கூடாது

'தித்வா' புயல் இலங்கையெங்கும் ஏற்படுத்திய அழிவும் உயிரிழப்பும் நாடு மறக்கமுடியாதவலியாகவேநீடிக்கும். 334 உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. இந்த எண்ணிக்கை இரட்டிப்பாவதற்கான சாத்தியங்களையும் மறுக்க முடியவில்லை. ஏனெனில் 370 பேர் காணாமற்போயுள்ளனர். வீடுகள், பாலங்கள், மின் இணைப்புகள், சாலைகள் என்பன தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. அதற்கும் மேலாக இந்தப் பேரழிவின் மத்தியில் மிகுந்த கவலையை ஏற்படுத்தியது, இலங்கையின் தொடர்பு வலையமைப்பு முழுமையாக முடங்கிய உண்மைதான். பேரிடர் வேளைகளில் மக்கள் இடையேயான ஒற்றை அழைப்பே உயிரைக் காக்கும் கடைசி நம்பிக்கை. ஆனால், அந்த அழைப்புகளே செல்லாமல் போனது மிகப் பெரிய துயரம்.

புயல் தீவிரமடைந்தபோது, மழை கொட்டித் தீர்த்தபோது, மண் சரிவுகள் பல பகுதிகளை விழுங்கிக் கொண்டிருந்தபோது, அலைபேசி (மொபைல்) வலையமைப்புகள் மக்களைக் கைவிட்டன. இணையம் முற்றிலும் மறைந்தது. மின் துண்டிப்புகள் ஒருபுறமிருக்க மறுபுறம் தரை மற்றும் காற்றாலைத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டமை மக்களை பேரிருளில் ஆழ்த்தின. மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள முடியாத நிலை உருவானது. மீட்புப் படையினர் பல இடங்களில் ஒருவருடன் ஒருவர் ஒத்துழைப்பதிலும் சிக்கல் ஏற்பட்டது. இந்த்தத தொடர்பு முடக்கம் ஒரு தொழில்நுட்பப் பிரச்சினை மட்டுமேயல்ல—உயிருக்கு ஆபத்தான பிரச்சினையும்கூட.

இந்தப்பேரிடரின்போதுதொலைத்தொடர்புநிறுவனங்களின், பலதொடர்புக் கோபுரங்கள் சேதமடைந்தன என்றும் சில கோபுரங்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்றும் பல இடங்களில் 'ஃபைபர்—ஆப்டிக்' கம்பிகள் துண்டிக்கப்பட்டிருந்தனஎன்றும்தெரிவிக்கப்பட்டது. இவ்வனைத்தும்மாபெரும் புயலின் சக்தியைப் பொருத்தவரை புரிந்துகொள்ளத்தக்கவையாயினும், நாம் ஒரு கடுமையான உண்மையை நேர்மையாக ஏற்கவேண்டும்—பேரிடர் நேரத்தில் தடுமாற்றமடையாத, மக்களைக் கைவிடாத தொலைத் தொடர்பு அமைப்புக்கள் எம்மிடம் இல்லை என்கிற உண்மைதான் அது. எந்தக் கட்டத்திலும் தொடர்பு அமைப்புக்கள் தடுமாறக்கூடாது. இது 'விருப்பம்' அல்ல; தேசிய பாதுகாப்பின் அத்திபாரம்.

### இனித் தாமதிக்கக் கூடாது

இந்தப் புயல் ஒரு மிகப் பெரிய பாடத்தை இலங்கைக்குக் கற்றுக் கொடுத்துள்ளது. அரசு, தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRCSL), மற்றும் அனைத்து சேவை வழங்குநர்களும் சேர்ந்து தேசமட்ட அபாய மதிப்பீடு ஒன்றை உடனடியாக மேற்கொள்ளவேண்டும். தற்போதைய வலையமைப்பின் பலவீனங்கள், கட்டமைப்புப் பிழைகள், மீள்கட்டுமானம் தேவைப்படும் இடங்கள் ஆகியவை துல்லியமாக மதிப்பீடு செய்யப்படவேண்டும். அதன் பிறகு, இந்த குறைகளை எவ்வாறு நீண்ட காலத்துக்குள் சரிசெய்வது என்பது தொடர்பான விவாதம் தேவை.

தொடர்புக்கோபுரங்கள்புயல்களைத்தாங்கும்வகையில்வலுப்படுத்தப்பட வேண்டும். உயர்திறன் மின்கலங்கள் அல்லது மின்பிறப்பாக்கிகள் (ஜெனரேட்டர்கள்) போன்ற கட்டாய மின்துணை அமைப்புகள் தேசிய சட்டங்களால் கட்டாயமாக்கப்படவேண்டும்.

இலங்கை தொலைத்தொடர்புச் சட்டம் உட்பட பல சட்டங்கள் திருத்தப்பட வேண்டியுள்ளன. சேவை வழங்குநர்கள் புயலுக்குப் பிந்தைய மீளமைப்பில் ஈடுபடுவதற்குப் பதிலாக, புயல் காலத்திலேயே சேவையை நடத்துவது அவர்களின் சட்டப்பூர்வக் கடமை என்பதை உறுதி செய்யும் சட்டங்கள் அவசியம்.

### தொடர்ச்சியான கண்காணிப்பு தேவை

ஒழுங்குமுறைகள் அவ்வப்போது மட்டுமே செயல்பட்டால் பயன் இல்லை. அவை நிரந்தரமான, தகவல் அடிப்படையிலான, கண்காணிப்பு சார்ந்தவையாக இருக்கவேண்டும். அதிகம் பாதிக்கப்படும் மாவட்டங்களில் வாழும் மக்களின் குரல்கள் தேசிய திட்டமிடலில் பிரதிபலிக்க வேண்டும்.

ஆனால் நவீன தொலைத்தொடர்பு மட்டும் பேரிடர் நேரத்தில் போதுமானதாகாது. மிகக் குறைந்த மின்சாரத்தில் இயங்கும், நீண்ட தூரத்தை கவரும், கோபுரங்களோ கம்பிகளோ இல்லாமல் இயங்கும் ரேடியோ அடிப்படையிலான தொழில்நுட்பங்களும் கட்டாயம் தேசிய மட்டத்தில் ஒருங்கிணைக்கப்படவேண்டும்.

இலங்கை இராணுவம் இதற்கான தொழில்நுட்பத்தை ஏற்கனவே பயன்படுத்தி வருகிறது – மைக்ரோவேவ் தொடர்பு, நிலத்தடி ரேடியோ வலை போன்றவை மிகுந்த நம்பகத்தன்மையுடன் செயல்படும். இவை மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், பேரிடர் முகாமைத்துவ மையம் போன்ற இடங்களில் ஏற்படுத்தப்படவேண்டும்.

இவை நவீன தொடர்பு அமைப்புகளுக்குப் பதிலாக அல்ல. ஆனால் நவீன அமைப்புக்கள் தடுமாறினால் உயிரைக் காப்பாற்றும் பாதுகாப்பு வலையமைப்பாகச்செயற்படும்தொழில்நுட்பத்துடன்உருவாக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படும் வகையில் தேசிய அவசரத் தொடர்பு செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எப்போது எத்தகைய எச்சரிக்கை வழங்கப்படும்? எந்த அமைப்பு பயன்படுத்தப்படும்? எவர் பொறுப்பு? மொபைல் வலையமைப்பு தடுமாறினால் என்ன மாற்று?—இந்த எல்லா கேள்விகளுக்கும் முன்னரே பதில் இருக்க வேண்டும்.

### இது மனித வாழ்வின் பிரச்சினை

'தித்வா' புயல் எங்களுக்குக் காட்டிய பாடம் கொடூரமானது. ஒரு எச்சரிக்கை தாமதமானால் ஒரு குடும்பமே அழியும்.

ஒரு அழைப்பு செல்லாவிட்டால் ஒரு உயிர் மாயும்.

எனவே தொடர்பு அமைப்புகளை வலுப்படுத்துவது வெறும் தொழில்நுட்ப மேம்பாடு அல்ல ஆளும்தரப்புக்களின் தலையாயக் கடமை.

இனி இவ்வாறான பிழைகள் நிகழக்கூடாது. இந்தப் பேரழிவு நாட்டின் கொள்கைகளையும் மனநிலையையும் மாற்றும் திருப்புமுனையாக மாற வேண்டும்.

---

### இயல்பு வாழ்வை மீட்டெடுக்க

## ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்கு அரசுத் தலைவர் அநுர வலியுறுத்து

பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கும் உதவி வழங்குவதற்கும் முன்னுரிமை அளிக்கும் அதேவேளையில், இயல்பு வாழ்க்கையை மீண்டும் ஏற்படுவதற்கு அவசியமான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மீளமைப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், இதற்காக நன்கு ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கை தேவை என்றும் அரசுத் தலைவர் அநுரகுமார சுட்டிக்காட்டினார்.

பேரிடரிற்குப்பின்னர் இயல்புவாழ்க்கையை மீண்டும் நிலைநாட்டுவது மற்றும் அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் நேற்றுக் காலை அரசுத் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார். நெடுஞ்சாலைகள் மற்றும் ஏனைய வீதிகள், குடிதண்ணீர் வசதிகள், நீர்ப்பாசன மறுசீரமைப்பு மற்றும் தொடருந்து பாதை மற்றும் தொடருந்து சேவைகளை மீளமைப்பது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

பேரிடரில் அழிந்த நெடுஞ்சாலைகள், தொடருந்து பாதைகள் மற்றும் பாலங்களைச் சீரமைப்பதன் மூலம் போக்குவரத்துக் கட்டமைப்பை மீளமைக்க துரித வேலைத் திட்டத்தின் அவசியம் குறித்து இதன் போது ஆழமாக ஆராயப்பட்டது. இதற்காக, சேதமடைந்த அனைத்து வீதிகளையும் அடையாளம் காண்பது மற்றும் தொடருந்து பாதைகள் மற்றும் சேவைகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான மூலோபாய திட்டத்தை தயாரிப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் சீரமைப்பதில் முதல் முன்னெடுப்பு சேதத்தை மதிப்பிடுவதும், அதே நரத்தில், சீரமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தக்கூடிய வளங்களை (பௌதீக மற்றும் மனித வளங்கள்) அடையாளம் காண்பதுமே ஆகும் என்று அரசுத் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

அத்தோடு இந்த நடவடிக்கைகளில் எழுந்துள்ள சிக்கல்கள் மற்றும் சவால்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு சாதகமான தீர்வுகளை வழங்க அரசுத் தலைவர் நடவடிக்கை எடுத்தார்.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, வீடமைப்பு, மற்றும் நீர் வழங்கல் அமைச்சு, இலங்கை புகையிரத திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகள், முப்படைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஸ்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

---

## கொட்டுகொட துணை மின்நிலைய செயற்பாடு வெள்ளத்தால் நிறுத்தம்

கொட்டுகொட பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ள நிலைமை காரணமாக கொட்டுகொட கிரிட் துணை மின்நிலையம் தற்காலிகமாகச் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள மின்விநியோகத்தை சீரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

பெய்து வரும் கனமழை காரணமாகச் பெரும்பாலான பகுதிகளில் வெள்ள நீர்மட்டம் வேகமாக அதிகரித்துள்ளதாகவும், இதன் விளைவாக முழு உபநிலைய மின் வளாகமும் நீரில் மூழ்கியுள்ளதாகவும் மின்சார சபை குறிப்பிட்டது.

இவ்வாறான பின்னணியில் பொதுபாதுகாப்பு கருதி கொட்டுகொட கிரிட் துணை மின்நிலையத்தின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் பெரும்பாலான பகுதிகளில் பாதுகாப்பு காரணிக்காக மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. மண்சரிவு காரணமாக பெரும்பாலான பகுதிகளில் மின்விநியோக கட்டமைப்பு முழுமையாக சேதமடைந்துள்ளது. அவற்றைச் சீரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கூரைகளின் மேல் பொருத்தப்பட்டுள்ள சூரிய சக்தி தகடுகளின் உரிமையாளர்கள், அவற்றை நேற்று பிற்பகல் 3.00 மணி வரை தாமாக முன்வந்து செயற்பாட்டை நிறுத்துமாறு இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்திருந்தது.

தற்போதைய இடர் நிலைமை காரணமாக மின்சாரக் கட்டமைப்பில் மின்சாரத்திற்கான கேள்வி கணிசமாகக் குறைவடைந்துள்ளது.

தேசிய மின் கட்டமைப்பின் நம்பகத்தன்மை மற்றும் உறுதிப்பாட்டை நிலைநிறுத்த சூரிய சக்தி தகடுகளை இடைநிறுத்துவது அவசியம் என்று மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

---

## அவசியமற்ற பயணங்கள் வேண்டாம் இராணுவ தளபதி லசந்த வலியுறுத்து

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக அத்தியாவசியமற்ற மற்றும் ஆபத்தான பயணங்களை தவிர்க்குமாறு இராணுவத் தளபதி லசந்த ரொட்ரிக்கோ பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவும் இடர் நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மோசமான காலநிலை காரணமாக பல இடங்களுக்கு பயணிப்பதை தவிர்க்கவும். உங்கள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்திக்கொள்ளும்போது உங்களை காப்பாற்ற வரும் இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியோரின் உயிர்களுக்கும் ஆபத்தை விளைவிக்கிறீர்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்கவும் அத்துடன், ஆபத்தான நிலமைகளை உணரும்போது இராணுவத்தினர் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். எவ்வாறாயினும், பொதுமக்கள் அனைவரினது ஒத்துழைப்பின் ஊடாகவே உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் - என்றார்.

---

## நீர்நிலைகளின் அருகே விளையாடாதீர்கள் வெள்ளத்தில் விளையாடுவது உயிராபத்து

### இடர் முகாமை மத்திய நிலையம் எச்சரிக்கை

நீர்நிலைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் அவற்றை அண்மித்த பகுதிகளில் விளையாடுவதை தவிர்க்குமாறு இடர் முகாமை மத்திய நிலையம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது, வெள்ளநீரில் விளையாடுபவர்கள் தொடர்பான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் அதிகரித்து வருகின்றன. இது உயிராபத்தான செயல் என்பதால் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென இடர் முகாமை மத்திய நிலையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில்நிலவும்சீரற்றவானிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் எலிக்காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே, சுத்தமான நீரை பயன்படுத்துமாறு சுகாதார மேம்பாட்டுப் பணியகம் வித்துள்ளது.

# நீர் விநியோகம் 3 நாள்களுக்குள் வழமை நிலைக்குத் திரும்பும்

நாட்டில் கடந்த சில நாட்களாக ஏற்பட்டுள்ள கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக பல மாவட்டங்களில் சேதமடைந்த நீர் வழங்கல் சேவையானது மூன்று நாட்களுக்குள் வழமைக்கு கொண்டு வருவதாகவும், நீர் விநியோகத்தை மீண்டும் தொடங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் பொறியிலாளர் பண்டார தெரிவித்துள்ளார்.

அரசுத் தலைவர் அநுரகுமாரவின் அறிவுறுத்தலின்படி மக்களுக்கு விரைவாக நீர் வழங்குவதற்கு முப்படைகள், நீர்வளத்திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மின்சார சபையின் ஆதரவு கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

முப்படை பாதுகாப்பு தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில நாட்களாக ஏற்பட்டுள்ள மோசமான காலநிலை காரணமாக பல மாவட்டங்களில் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நீர் வழங்கும் நிலையங்கள் சேதமடைந்துள்ளன. குறிப்பாக கண்டி மாவட்டத்தில் பெருமளவில் சேதமடைந்துள்ளன.

திஸ்ஸமகாராமை, கதிர்காமம், பதுளை, வெலிமடை, அம்பாறை, வடமத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளன. காலி, அனுராதபுரம், மட்டக்களப்பு, மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் நீர் வழங்கல் முற்றிலும் வழமைக்கு திரும்பி உள்ளது.

மேல் மாகாணத்தில் அம்பதளை, லபுகமை, கலப்புவாவை மற்றும் பியகம பிரதேசங்களில் காணப்படும் நீர் வழங்கும் நிலையங்களுக்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை. மேலும் களனி கங்கை பெருக்கெடுத்ததால் ஏற்பட்ட பாதிப்பும் குறைந்துவிட்டது.

நீர் வழங்கல் துண்டிக்கப்பட்ட பல பிரதேசங்களில் தற்காலிகமாக பவுசர்கள் மூலம் நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய பிரதேசங்களுக்கு நீர் வழங்கலை வழமைக்கு கொண்டு வர முப்படை, நீர்வளத்திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மின்சாரசபையின் ஒத்துழைப்புடன் பணிகள் இடம்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் நாடளாவிய ரீதியில் மூன்று நாட்களில் முழுமையாக நீர் வழங்க முடியும் - என்றார்.

## தொற்றுநோய்கள் குழந்தைகளிடம் பரவுக்கூடிய அதிக வாய்ப்புள்ளது

### மருத்துவர்கள் எச்சரிக்கை

வெள்ளம் மற்றும் இடர் நிலமைகள் காரணமாக குழந்தைகளிடையே தொற்று நோய்கள் பரவுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக குழந்தை நோயியல் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இடர் நிலைமைகளின் பின்னரான அவதானங்கள் குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

குளிரான காலநிலையுடன் வயிற்றுப்போக்கு, குடற் காய்ச்சல், எலிக்காய்ச்சல் மற்றும் இன்புளுயன்ஸா உள்ளிட்ட நோய்கள் அதிகரிக்கும் போக்கு காணப்படுகிறது. வெள்ள நிலைமை தணிந்த பின்னர் டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்கள் தலைதூக்கும் அபாயம் காணப்படுகிறது.

முகாம் ஒன்றில் இருந்தாலும் சுத்தமான உணவையும் தண்ணீரையும் வழங்க முடிந்தால், அதுவே பெரிய விடயம். அசுத்தமான தண்ணீரால் உயிரிழப்புகூட ஏற்படலாம். நாம் தானம் கொடுத்தாலும் சுத்தமாகத்தானே கொடுக்கிறோம். இந்த நாட்களில் ஈக்கள் அதிகரித்துள்ளதால், உணவைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் இந்த நிலையைத் தணிக்க முடியும்.

வயிற்றுப்போக்கு ஏற்பட்டால், வீட்டில் ஜீவனி, வறுத்த அரிசிக் கஞ்சி, எலுமிச்சை, தோடை, நாரந்தை, மாதுளை, வாழைப் பழங்கள், இளநீர், யோகர்ட் போன்ற உணவுகள் நல்லது.

முகாம்களில் உள்ள பிள்ளைகளுக்குத் தடுப்பூசி போடாதவர்கள் இருந்தால், அது மற்றவர்களுக்கு மிக விரைவாகப் பரவலாம். சின்னம்மை (தட்டம்மை), கக்குவான் இருமல் போன்ற நோய்கள் பரவுகின்றன. அரசாங்கத்தால் வழங்கப்படும் தடுப்பூசிகளைப் பெற்றிருந்தால் பல நோய்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கலாம்.

எந்தவொரு விடயத்தையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம். பயப்பட வேண்டாம். வெள்ள நீர் பாய்ந்து அந்த இடத்திற்குச் சென்றால் எலிக்காய்ச்சல் ஏற்படலாம். வைத்தியர் பரிந்துரையின்படி அதற்காக டொக்ஸிசைக்ளின் 200 மி.கி மாத்திரையை எடுத்துக்கொள்ளுங்கள் என்றார்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாகிஸ்தான் நேரடி உதவி

பாகிஸ்தானின் தேசிய இடர் முகாமைத்துவ அதிகாரசபையானது இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கைக்கு நிவாரண உதவி மற்றும் மீட்புக்குழுவை உடனடியாக அனுப்புவதன் மூலம் தனது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

நிவாரணப் பொதியில் மீட்புப் படகுகள், உயிர்காக்கும் கவசங்கள் போன்ற முக்கியமான உயிர்காக்கும் மற்றும் துணைப்பொருட்கள் உள்ளடக்கவிருப்பதாகவும் அறிவித்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி மருத்துவ சேவையை வழங்க நடமாடும் கள மருத்துவமனை முகாமை முன்னெடுப்பதற்கும் அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

இதேநேரம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாகிஸ்தான் கடற்படை நிவாரணப் பொருட்களை இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளது.

சர்வதேச கடற்படை மதிப்பாய்வு-25இல் பங்கேற்பதற்காக கொழும்பில் துறைமுகத்தில் உள்ள பாகிஸ்தான் கடற்படைக் கப்பலான எஸ்.ஏ.ஐ.எப், பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவி பேரிடர் நிவாரண நடவடிக்கைகளை வழங்கியுள்ளது.

தற்போதைய தேசிய நிவாரண முயற்சிகளை அதிகரிக்க இலங்கை அதிகாரிகளுக்கு மனிதாபிமான நிவாரணப் பொருட்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிப் பொதியில் உணவு, அவசர மருந்துகள், முதலுதவி பெட்டிகள் மற்றும் அத்தியாவசிய உபகரணங்கள் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

## அரச வைத்தியசாலைகள் கடும் நெருக்கடிக்குள்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

பேரிடருக்கு மத்தியில் நோயாளர்கள், பாதிக்கப்பட்டோருக்கான சிகிச்சை சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கு சிரமமாக உள்ளதாகவும், நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகள் கடும் நெருக்கடிக்கு முகங் கொடுத்துள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா வைத்தியசாலை உள்ளிட்ட அம் மாவட்டத்தில் உள்ள ஏனைய ஆதார வைத்தியசாலைகளையும் தொடர்புக் கொள்ள முடியவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மோசமான காலநிலையின் பின்னர் வானிலை மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது. எனினும் கடந்த சில நாட்களாக நிலவிய கடும் மழை காரணமாக நாடு முழுவதும் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துச் செல்கிறது. நேற்று (நேற்று முன்தினம்) இரவு முதல் களனி ஆற்றின் நீர்மட்டமும் உயர்வடைந்து வருகிறது. பேரிடருக்கு மத்தியில் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகளை வழங்க சிரமமாக உள்ளதுடன், வைத்தியசாலை கட்டமைப்பு கடும் நெருக்கடிகளுக்கு மத்தியில் செல்படுகின்றன.

கண்டி, பதுளை, நுவரெலியா, மாத்தளை, புத்தளம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. விசேடமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை சேவைகளை வழங்குவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. பேரிடரின் பின்னர் காயமடைந்தோர், பாதிக்கப்பட்டோர் மற்றும் தொற்று நோய்களுக்கு ஆளாகியவர்களுக்கு சுகாதார சேவை இன்றியமையாததொன்றாகும். உயிர் பாதுகாப்பு, மீட்பு நடவடிக்கைக்கு பின்னர் வைத்தியசாலைக்கு வருகைத்தரும் நோயாளிகளுக்கு அவசியமான வசதிகளை வழங்குவது அவசியம்.

கண்டி, நாவலப்பிட்டி, கம்பஹா, பேராதெனிய, பதுளை, நுவரெலியா, கம்பளை, சிலாபம், மஹியங்கனை, அனுராதபுரம் ஆகிய பல வைத்தியசாலைகள் நெருக்கடிக்கு மத்தியில் சேவைகளை வழங்கிவருகின்றன. குறிப்பாக மஹியங்கனை வைத்தியசாலையில் சிகிச்சை சேவைகள் ஸ்தம்பித்துள்ளன. அத்தியாவசிய சேவைகள் மாத்திரம் வழங்கப்படுவதுடன், அவ்வைத்தியசாலையில் இருந்த நோயாளர்கள் பிபில வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். நுவரெலியா வைத்தியசாலை மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஏனைய ஆதார வைத்தியசாலைகளையும் தொடர்புக் கொள்ள முடியாமல் உள்ளது.

வைத்தியர்கள் முதற்கொண்ட சுகாதார குழு நேற்றைய தினம் நுவரெலியாவின் பின்தங்கிய பகுதிக்கு சுமார் 12 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சையளித்துள்ளனர். நோயாளர்கள், வைத்திய ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலைக்கு அருகிலிருந்த மக்கள் என சுமார் 500 பேர் வெள்ளம் காரணமாக சிலாபம் வைத்தியசாலையினுள் சிக்கியுள்ளனர். அவ்வைத்தியாலையின் சிறுவர் நோயாளர் அறையில் பிள்ளைகள், தாய்மார்கள் என 50 க்கும் மேற்பட்டோர் உள்ளனர். அவர்களை புத்தளம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட வில்லை என்றார்.

## மாவிலாறில் 121 பேர் மீட்பு

*மாவிலாறு அணைக்கட்டு உடைந்தமையினால் சிக்கித் தவித்த மக்களை மீட்கும் நடவடிக்கை அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்கவின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்டது. இதுவரையில் விமான நடவடிக்கைகள் மூலம் 121 பேரின் உயிர்களைக் காப்பாற்ற முடிந்துள்ளதாக அரசுத் தலைவர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.*

*தங்கவேலி என்ற கிராமத்தில் உள்ள சுமார் 1,000 பேரை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென அரசுத் தலைவருடன் தொலைபேசியில் உரையாடிய தேரர் ஒருவர் தெரிவித்தார்.*

*மூதூர் மற்றும் நீலபொல பிரதேசங்களில் உள்ள மக்களை நேற்று இரவே வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரியவந்துள்ளது.*

*கிண்ணியா நகரம் தற்போது முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், சிலர் மரங்களுக்கு மேலே ஏறி தமது உயிர்களைப் பாதுகாத்துள்ளனர் எனவும், அவர்களை மீட்க கடற்படை நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*மாவிலாறு அணைக்கட்டு உடைந்தமையால் சோமபுர, சிறிமங்கலபுர, கல்யார், தெஹிவத்த ஆகிய பிரதேசங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பிரதேச மக்கள் தற்போது சேருநுவர நவோத்யா பாடசாலைக்கு விமானம் மூலம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.*

*இதனையடுத்து, பாதிக்கப்பட்ட மக்கள் சேருவாவில ராஜமஹா விகாரையின் பாதுகாப்பான இடமொன்றில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.*

## வீதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தார்.

பொலிஸ் நிலையத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர்தூரத்திற்குள்கொலைஇடம்பெற்றுள்ளது. இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளை வழிமறித்த, மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர், பின்னால் அமர்ந்து பயணித்துக் கொண்டிருந்த சந்தேகநபரான இளைஞன் மீது சரமாரியாக வாள்களால் வெட்டத் தொடங்கினர்.

வெட்டை வாங்கியபடி இருந்து உயிரை காக்க ஓடியவர், முடியாமல் 50 மீட்டர் தூரம் ஓடிச் சென்ற பின்னர் அங்கும் அவரை மறித்து மேலும் இருவர் மறித்து வெட்டவே திரும்பி ஓடி வந்து அற்புதாஸ் ஸ்ரோர் என்ற கடையின் வாசலில் விழுந்தார். கொலையாளிகள் துரத்திச் சென்று அவரை மீண்டும் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றனர்.

வெட்டப்பட்ட இளைஞனை அங்கிருந்தவர்கள் நோயாளர் காவுவண்டியை அழைத்துயாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். வைத்தியசாலைக்குச் சென்றபோதே இளைஞன் உயிரிழந்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். முன்பகை காரணமாகவே கொலை இடம்பெற்றுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். வர்த்தக நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமராக்களில் சம்பவங்கள் பதிவாகியுள்ளதால் தாக்குதலாளிகளை அடையாளம் கண்டுள்ளதாகவும், அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடுவதற்கும், சபாநாயகருக்கு இத்தீர்மானத்தை அறிவித்து, இரண்டு நாள் விவாதத்தைகோருவதற்கும்எதிர்பார்த்துள்ளார் என்றும் தயாசிறி தெரிவித்தார்.

நாடாளுமன்ற இன்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடவுள்ளது. காலை 10.30 மணிமுதல் மாலை 6 மணிவரை 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சுக்கான குழுநிலை விவாதம் நடைபெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்துமாலை6மணிமுதல் இரவு 12 மணிவரை புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சுக்கான குழுநிலை விவாதம் நடைபெறவுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையைக் கருத்திற்கொண்டு கட்சித் தலைவர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் கடந்த வெள்ளிக்கிழமை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

## பாதிக்கப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

மாவட்ட செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்களுக்கு விசேட அறிவுறுத்தலை விடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வுநிலை) சம்பத் துய்யகொந்த இதனைத் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இடர் நிவாரண சேவை சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்கள் 01/2025 ஊடாக விரைவாக உதவியளிப்பதற்கு உரிய அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சிமன்றங்கள் அமைச்சின் செயலாளரினால் எனக்கு அனுப்பி கடிதத்தின் பரிந்துரைகள் வருமாறு,

தற்காலிக பாதுகாப்பு முகாம்களுக்கு செல்வர்களுக்குமாத்திரம்உலர்உணவுகளை வழங்க வேண்டும் என இடர் உதவிச் சேவை சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்கள் 01/2025யில் குறிப்பிடப்படவில்லை. அந்தச் சுற்றறிக்கை இல 5.1.5.1.2.1 ஊடாக சகல தரப்பினருக்கும் உலர் உணவு வழங்குவதற்குரிய மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே தற்காலிக முகாம்களுக்கு வருகைத் தராத நிலையில், பாதிக்கப்பட்டுள்ள சகல தரப்பினருக்கும் உலர் உணவுகளை வழங்கவேண்டும்.

இடர் நிலைமையின்போது மாவட்ட இடர் முகாமைத்துவம்மற்றும்நிவாரணசேவைகுழு அல்லதுபிரதேச இடர்முகாமைத்துவம்மற்றும் நிவாரண சேவை குழுவின் அனுமதியுடன் உரிய தீர்மானங்களை எடுக்குமாறு அரசுத் தலைவர் உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரால் 2025.11.28 அன்று வெளியிடப்பட்ட செலவுச் சுற்றறிக்கையில் நிவாரமணிப்பதற்கு 50 மில்லியன் ரூபாவைச் செலவழிப்பதற்கு பிரதேச செயலாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் ஒருவருக்கு உலர் உணவுக்காக 2,100 ரூபா, இரண்டு அங்கத்தவர்களை கொண்ட ஒரு குடும்பத்துக்கு 4,200 ரூபா, மூன்று அங்கத்தவர்களை கொண்ட ஒரு குடும்பத்துக்கு 6,300 ரூபா, நான்கு அங்கத்தவர்களைகொண்டஒருகுடும்பத்துக்கு 8,400 ரூபா,ஐந்து அங்கத்தவர்களையோ அல்லதுஅதற்குமேலதிகமாகஅங்கத்தவர்களை கொண்ட ஒரு குடும்பத்துக்கு 10,500 ரூபா செலுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்க

பேரிடர்க்குப்பின்னர்ஏற்படக்கூடியசுகாதாரப்பிரச்சினைகள் மற்றும்தொற்றுநோயைக் கட்டுப்படுத்திக்கொள்ள பொதுமக்கள் விரைந்து பொது சுகாதார பரிசோதகர்களிடம் ஆலோசனை மற்றும் உதவியைப் பெறுமாறு இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அவசரகால பேரிடர் மேலாண்மை குறித்து நேற்று (30) பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தால் வெளியிடப்பட்டிருந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முழு நாட்டையும் பாதித்துள்ள அசாதாரணமான காலநிலையால்பொதுமக்கள்கடுமையாகபாதிக்கப்பட்டுள்ளனர். மண்சரிவு, வெள்ளப்பெருக்கு என பாரியளவான சேதம் பதிவாகியுள்ளது. அவற்றில் சிக்கி பெருமளவான உயிர்கள் பதிவாகியுள்ளதுடன், பலர் காணாமல் போயுள்ளனர். இந்த பேரிடரில் பாதிக்கப்பட்டுள்ள எம்மக்களை பாதுகாப்பதற்கு தேவையான அணைத்து துறைகளிலும் பொது சுகாதார பரிசோதகர்கள் தமது முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு, தொற்று நோய் பரவுவதை கட்டுப்படுத்தல், பாதுகாப்பான உணவுவை வழங்குதல் , அத்தியாவசிய சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பாதுகாப்பான குடிநீர் விநியோகம், அவசர சிகிச்சை சேவைகளை தொடர்ச்சியாக வழங்கிவருவதோடு , கழிவு மேலாண்மைத் தொடர்பிலும் எமது பங்களிப்பை வழங்கி வருகிறோம். இந்த இக்கட்டான சூழலில் பாதிக்கப்பட்டோரை தேடிவந்து உதவி மற்றும் உதவிகளை வழங்கும் தன்னார்வ தொண்டர்களை ஆதரிப்பதுடன், அவர்களின் அர்ப்பணிப்பிற்கு நன்றிக்கூற கடமைப்பட்டுள்ளோம்.

பேரிடருக்கு பின்னர் தொற்றுநோய், எலிக்காய்ச்சல் என்பன விரைவாகப் பரவுவதால் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும். பேரிடருக்குப் பிந்தைய சூழ்நிலையில் ஏற்படக்கூடியசுகாதாரப்பிரச்சினைகள்மற்றும்நோய்த்தொற்றை கட்டுப்படுத்திக் கொள்ள பொதுமக்கள் விரைந்து பொது சுகாதார பரிசோதகர்களிடம் ஆலோசனை மற்றும் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கிறோம். நாடு முழுவதும் உள்ள பொது சுகாதார பரிசோதகர்கள் 24 மணிநேரமும் பொதுமக்களுக்கான சேவையை வழங்க தயாராக உள்ளனர்.

# பொதுப் பாதுகாப்பைக் கருதியே பல இடங்களில் மின் துண்டிப்பு

## மின்சார சபை அறிவிப்பு

பொதுப்பாதுகாப்பினைகருத்திற்கொண்டு பெரும்பாலான பகுதிகளில் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பினை உறுதிப்படுத்தியதன் பின்னரே மின்சாரம் விநியோகிக்கப்படும். மின்னிணைப்பின் போது வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென இலங்கை மின்சார சபையின் பொதுமுகாமையாளர் நொயெல் பிரியந்த தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மின்விநியோக கட்டமைப்பு முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மலையகத்தில் மண்சரிவு தீவிரமடைந்துள்ளதால் அங்கு மின்விநியோக கட்டமைப்பு மற்றும் மின்னுற்பத்தி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மலையகத்துக்கான மின்விநியோக சேவையை மீளத் தொடங்குவதற்குரிய நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. பொதுமக்களின் பாதுகாப்பினையும், சேவையாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொண்டுதான் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

தற்போதைய நெருக்கடியான நிலையில் தேசிய மின்கட்டமைப்பு 540 ஜிகாவாட்டாக வரையறுக்கப்பட்டுள்ளது. அம்பாறை, மஹியங்களை மற்றும் வவுணத்தீவு ஆகிய பகுதிகளுக்கு மாற்று வழிமுறைகள் ஊடாக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது.

பெரும்பாலானபகுதிகளில்மின்விநியோகம்துண்டிக்கப்பட்டுள்ளது அல்லது செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. மின்விநியோக இணைப்பின் போது வைத்தியசாலைகளுக்கு தற்போது முன்னுரிமை வழங்கப்படுகிறது. பொதுப் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு பெரும்பாலான பகுதிகளில் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பினை உறுதிப்படுத்தியதன் பின்னரே மின்சாரம் விநியோகிக்கப்படும்.தற்போது 72 சதவீதமளவில் மின்னிணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன - என்றார்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

•CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# திருமலை - காங்கேசன் இடையில் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்குக

தற்போது நாட்டிலுள்ள சகல இடங்களிலும் மண் ஈரப்பதமாக இருப்பதால், சில சமயங்களில் மண்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மக்கள் வீடுகளுக்குத்திரும்பிச்செல்லும்போது இது குறித்துக் கவனம் செலுத்துவது அவசியமாகும். அத்தோடு, திருகோணமலை முதல் காங்கேசன்துறை வரையிலானகரையோரப்பகுதியில்மீன்பிடிமற்றும் கப்பல்போக்குவரத்துநடவடிக்கைகளில்ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும் மீனவர் சமூகத்திடம் கேட்டுக் கொள்கின்றோம் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சூறாவளியின் நேரடித் தாக்கம் நீங்கியுள்ள போதிலும், அதன் மறைமுகத் தாக்கம் இன்னும் நீடிக்கிறது. காற்றின் வேகம் மணிக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கும். கடல் அலைகள் 2-3 மீட்டர் வரை உயரும். ஏனைய கடல் பகுதிகளில் காற்றின் வேகம் குறைந்துள்ளதால், மீன்பிடி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவது குறித்து மீன்பிடித் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து பொருத்தமான முடிவுகளை எடுக்க முடியும்.

'தித்வா' புயலானது நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 170 கி.மீ வட-வடகிழக்கே மையம் கொண்டிருந்தது. இது வட தமிழ்நாட்டுக் கடற்கரைக்கு இணையாக வடக்கு நோக்கி நகர அதிக வாய்ப்புள்ளது. எனவே திருகோணமலையிலிருந்து புத்தளம் வரை, காங்கேசன்துறை மற்றும் மன்னார் வழியாக நீண்டுள்ள கடல் பகுதிகளிலும், அத்துடன் அதனைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளிலும், மணிக்கு 50-60 கி.மீ வேகத்திலும், சில சமயங்களில் 70 கி.மீ வரை பலத்த காற்று வீசக்கூடும். இந்தக் கடல் பகுதிகள் சில நேரங்களில் மிகவும் கொந்தளிப்பாக்கக காணப்படும். மற்ற கடல் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 30-40 கி.மீ இருக்கும்.

புத்தளத்திலிருந்து கொழும்பு வழியாக நீர்கொழும்பு வரையிலும், திருகோணமலையிலிருந்து பொத்துவில் வழியாக அம்பாந்தோட்டை வரையிலும் நீண்டுள்ள கடலோரப் பகுதிகளில், சில சமயங்களில் மணிக்கு சுமார் 50 கி.மீ வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும். இந்தக் கடல் பகுதிகள் சில நேரங்களில் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டை சுற்றியுள்ள மற்ற கடல் பகுதிகள் மிதமான கொந்தளிப்புடன் காணப்படும்.

# மாட்டியுள்ள மக்களை மீட்க மீன்பிடிப் படகுகள் களத்தில்

## பிரதி அமைச்சரின் உத்தரவு இது

நாடு முழுவதும் பரவி வரும் வெள்ள இடர் நிலைமையை அடுத்து, பொதுமக்களை மீட்கும் நடவடிக்கைகளுக்காக மீன்பிடிப் படகுகளை உடனடியாக ஈடுபடுத்துமாறு, கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

வெள்ள மீட்புப் பணியில் கடற்றொழில் துறையின் பங்களிப்பை ஒருங்கிணைக்கும் நோக்கில், பிரதி அமைச்சர் தலைமையில் நேற்று அவசரக் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இணையவழி ஊடாக நடைபெற்ற இந்த அவசரக் கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் கோலித கமல் ஜினதாச, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த மற்றும் இலங்கை கடற்படையின் முத்த அதிகாரி ஒருவரும் கலந்துகொண்டனர்.

அவிசாவளை, சிலாபம் மற்றும் கேகாலை போன்ற வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில், மீட்புப் பணிகளுக்கு நிலவும் படகுப் பற்றாக்குறை குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

'எமது மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர். மீட்பு நடவடிக்கையில் படகுப் பற்றாக்குறை ஒரு பெரும் பிரச்சினையாகும். எனவே, கடற்றொழில் அமைச்சு என்ற வகையில், அந்தக் குறையை நிவர்த்தி செய்ய நாம் தலையிடுகிறோம்' என பிரதி அமைச்சர் ரத்ன கமகே இதன்போது தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது ,

இடர் முகாமைத்துவ நிலையத்திடமிருந்து கோரிக்கை கிடைத்தவுடன், தேவையான படகுகளை வழங்குமாறு எமது மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர்களுக்கு நான் பணிப்புரை விடுத்துள்ளேன். இலங்கை கடற்படையினர் அந்தப் படகுகளின் போக்குவரத்து மற்றும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து, வேகமானதும் ஒழுங்கமைக்கப்பட்டதுமான மீட்புப் பணியை உறுதிசெய்வார்கள்.

இந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து, தேசிய மீட்புப் பணிக்கு ஆதரவளிக்கும் முகமாக, கொழும்பிலிருந்து 30 படகுகள், நீர்கொழும்பிலிருந்து 20 படகுகள் மற்றும் அளுத்கமவிலிருந்து 20 படகுகளை உடனடியாக அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை கடற்றொழில் திணைக்களம் ஏற்கனவே மேற்கொண்டுள்ளது.

மீன்பிடிப் படகுகள், உபகரணங்கள் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு நிலையங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாக மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை வழங்குமாறு கடற்றொழில் திணைக்களம் மற்றும் தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணிக்கப்பட்டுள்ளது.

வழங்கப்படும் எந்தவொரு நிவாரணமும் இடைத்தரகர்கள் இன்றி, நேரடியாகப் பாதிக்கப்பட்ட மீனவருக்குச் சென்றடைய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தொழிலுக்குச் செல்ல முடியாத மீனவக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்குவதற்கான பிரேரணை ஒன்று அரசுத் தலைவர் செயலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகளுக்குச் செல்லும் சேதமடைந்த அணுகல் வீதிகள் குறித்து துரித கணக்கெடுப்பொன்றை மேற்கொண்டு, சீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நவம்பர் 26 அமைச்சினால் வெளியிடப்பட்ட முன் எச்சரிக்கைகள், கடலில் ஏற்படவிருந்த ஒரு பெரும் இடர்த்தைத் தடுப்பதற்கு உதவியதாக பிரதி அமைச்சர், அந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றிய மீனவ சமூகத்திற்கு நன்றிகள் - என்றார்.




# ஜப்பானியப் பிரதமர் இரங்கல் தெரிவிப்பு

இலங்கையைத் தாக்கிய புயலால் ஏற்பட்ட பல விலைமதிப்பற்ற உயிர்களை இழந்ததற்கு நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று ஜப்பானியப் பிரதமர் தகய்ச்சி சனா தெரிவித்துள்ளார்.

அவர்விடுத்துள்ள இரங்கல் செய்தியில், மனிதாபிமானக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலும், இலங்கையுடனான நமது நட்புறவைக் கருத்தில் கொண்டும், ஜப்பான் சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்க நிபுணர்கள் குழுவை அனுப்பவும், அவசரகால நிவாரணப் பொருட்களை வழங்கவும் முடிவு செய்துள்ளது. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும், பேரிடர் பாதித்த பகுதிகளை மீண்டும் கட்டியெழுப்பவும் எனது மனமார்ந்த பிரார்த்தனைகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றுள்ளது.

இதேவேளை, சூறாவளியால் இலங்கையில் ஏற்பட்ட பாரிய சேதங்களுக்கு பதிலளிக்கும் விதமாக, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மூலம் இலங்கைக்கு ஒரு மதிப்பீட்டுக் குழுவை அனுப்புவதற்கு ஜப்பான் அரசு முடிவு செய்துள்ளது.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவன ஊழியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் உட்பட 4 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழு, தரையில் மருத்துவத் தேவைகளைக் கண்காணித்து, குழுவை அனுப்புவதற்கான சாத்தியக்கூறுகளை ஒருங்கிணைக்கும். இக்குழு நேற்றையதினம் யப்பானில் இருந்து புறப்பட்டுள்ளது.

ஜப்பான் ஆளும்தரப்பு, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூடாரங்கள் மற்றும் போர்வைகள் உள்ளிட்ட அவசர நிவாரணப் பொருட்களை வழங்கவும் முடிவு செய்துள்ளது.

மனிதாபிமானக் கண்ணோட்டத்தையும், இலங்கை மக்களுடனான நெருங்கிய உறவையும் கருத்திற்கொண்டு, சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர உதவிகளை வழங்க ஜப்பான் முடிவு செய்துள்ள மை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2025இல் வெளியிடப்பெற்றது